DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.TC. No 20/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ரேவதி(தலைமை காவலர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A3 died. A2,A4 absent. u/s 355 BnsS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 23.02.2026

---

**முதல் விசாரணை**

1.நான் தற்போது திருவாடானை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் வழக்கின் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் கணேசன் பணி ஓய்வு பெற்றுவிட்டபடியால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.12.2016 தேதி காலை 8.30 மணியளவில் திருவாடானை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருக்கும் போது திருவாடானை காவல் நிலைய மனு ரசீது எண் 286/2016 யை

பார்வையிட்டு குமரன் என்பவர் அளித்த புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்றஎண் 416/2016 u/s 448,294(b),323,427,506(i) IPC ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

2.பின்னர் வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துகொண்ட சார்பு ஆய்வாளர் அன்றையதினமே காலை 9.30 மணியளவில் சம்பவயிடம்சென்று சாட்சிகள் அ.சா.3 ராஜா மற்றும் கருப்பையா ஆகியோர் முன்னிலையில் பார்வைமகசர், வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வைமகசர் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

3.பின்னர் அ.சா.1 குமரன் அ.சா.2 அன்புசெல்வி மற்றும் சாட்சிகள் சாரதா ,சேகர், அழகம்மாள், அ.சா.3 ராஜா, கருபபையா மற்றும் மனு ரசீது வழங்கிய சிறப்பு சார்பு ஆய்வாளர் முத்துவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். அதன்பிறகு காயம்பட்ட நபரான அ.சா.2 அன்புசெல்விக்கு மருத்துவ சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் பாலமுருகன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்று பெற்றார். அ.சா.2 ன் **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**4.** வழக்கின் எதிரிகளை கைதுசெய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

5. பின் வழககின் தன்மைக்கேற்ப வழக்கின் சட்டப்பிரிவுகளை u/s 448,294(b),323,427,506(i) IPC லிருந்து 448,294(b),323,427 IPC ஆக மாற்றம்செய்துள்ளார்., அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

5. பின் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது u/s 448,294(b),323,427 IPC IPC கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரர் அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.